## தூத்துக்குடி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(மே 2-ம் தேதி முதல் மே 6-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (28.4.15- 30.4.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 4.7 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 30 - 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24 - 26 |
| வானம் (ஆக்டா) | 4 - 7 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 87 - 92 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 84 - 86 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 6 - 7 |
| காற்றின் திசை | 140 - 160 |

**6.5.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>2.5.15 | நாள் 2<br>3.5.15 | நாள் 3<br>4.5.15 | நாள் 4<br>5.5.15 | நாள் 5<br>6.5.15 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 33 | 33 | 34 | 34 | 34 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 | 25 | 26 | 26 | 26 |
| வானம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 85 - 87 | 85 - 87 | 83- 87 | 83- 87 | 83 - 87 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 7/ தென்மேற்கு | 7/ தென்மேற்கு | 7/ மேற்கு | 7/ தெற்கு | 7/ தென்மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மேகமூட்டம், மிதமான மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் /சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| கரும்பு | வளர்ச்சி பருவம் | வளர்ச்சி பருவத்திலுள்ள கரும்பில் நீர்ப்பற்றாக்குறையை சமாளிக்க யூரியா 2.5% மற்றும் பொட்டாஷ் 2.5% கரைசலை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். மேலும் கயோலின் 6 சத கரைசலை தெளித்து நீராவிப்போக்கின்மூலம் நீர் இழக்கப்படுவதை குறைக்கவும். பாசன நீர் பற்றாக்குறையை சமாளிக்க ஒன்றுவிட்டு ஒன்று சால் பாசனம் மற்றும் விடுசால் பாசனம் போன்ற முறைகளை |

| | | |
|---|---|---|
| | | பின்பற்றவும். |
| கத்தரி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | கத்தரியில் பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 3 நாட்களுக்கு ஒரு முறை அளிக்கவும். ஒவ்வொரு உரப்பாசனத்திற்கும் 12- 61 - 0 உரம் 0.69 கிலோ/ எக்டர், 13- 0-45 உரம் 2.47 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா 3.96 கிலோ/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். நட்ட 71- 150-ம் நாள் வரை இதே அளவு ஊட்டச்சத்து பரிந்துரையை பின்பற்றலாம். |
| தக்காளி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | தக்காளியில் பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 3 நாட்களுக்கு ஒரு முறை அளிக்கவும். ஒவ்வொரு உரப்பாசனத்திற்கும் 12- 61 - 0 உரம் 1.14 கிலோ/ எக்டர், 13- 0-45 உரம் 6.17 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா 2.8 கிலோ/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். நட்ட 71- 150-ம் நாள் வரை இதே அளவு ஊட்டச்சத்து பரிந்துரையை பின்பற்றலாம். |
| வெண்டை | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | வெண்டையில் பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டுநீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும். 12- 61 - 0 உரம் 8.2 கிலோ/ எக்டர், 13- 0-45 உரம் 44.4 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா72.3 கிலோ/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். |

குறுஞ்செய்தி- மழை இல்லை. தக்காளி- சொட்டு உரநீர்ப்பாசனம்- 12-61 -0 உரம் 1.14 கிலோ/எக்டர், 13-0-45 உரம் 6.17 கிலோ/எக்டர்& யூரியா2.8 கிலோ/எக்டர்- 3 நாட்களுக்கு ஒரு முறை அளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி